## சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி

# OS. No.391/2023

03.03.2026

## D.W.1- ரஞ்சனி

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:**

எனது நிருபண வாக்குமூலத்தை படித்து பார்த்து தான் கையெழுத்து செய்தேன். அதில் உள்ள விவரம் எனக்கு தெரியும். வாதியை எனக்கு நேரடியாக தெரியாது. எனது மகள் மூலமாக தெரியும். என் மகள் மூலம் குடும்ப அளவில் நெருங்கிய பழக்கம். வாதியின் திருமணத்திற்கு நான் சென்றேன். அப்போது எனது கணவர் வாதிக்கு மாலை போட்டார் என்றால் சரிதான். எனக்கு உசிலம்பட்டியில் உள்ள ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா வங்கி மற்றும் இந்தியன் வங்கியில் கணக்கு உள்ளது. மேற்படி வங்கி கணக்குகளிலிருந்து வாதியின் வங்கி கணக்கிற்கு பணம் அனுப்பியுள்ளேன். 2023ம் வருடம் 7, 8, 9 ஆகிய மாதங்களில் பணம் அனுப்பியுள்ளேன் என்றால் அதுபற்றி எனக்கு தெரியவில்லை. வழக்கிற்காக தெரியாது என பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வாதி எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார். மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பை நான் தான் கையெழுத்து போட்டு பெற்றுக்கொண்டேன். அறிவிப்பை பெற்றப்பின் பதில் அறிவிப்பு அனுப்பவில்லை. பதில் அறிவிப்பு அனுப்பாமல் இருந்ததற்கான காரணம் என்ன என்றால் ஒன்றுமில்லை. நான் பொய்யான வழக்கறிஞர் அறிவிப்பிற்கு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன், நேரடியாக வாதியை சந்தித்து கேட்டேன். எந்த காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் தெரியாது. புகார் ரசீது உள்ளதா என்றால் இல்லை. வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொண்ட பிறகு வாதியை சந்தித்து கேட்டேனா என்றால் கேட்கவில்லை. நான் வாதியிடம் பணம் கடனாக வாங்கியதற்கு சாட்சிகள் சாட்சியம் அளித்துள்ளார்கள், அதுபற்றி என்ன சொல்கிறேன் என்றால் எனக்கு தெரியாது. வாதியிடம் பணத்தை வாங்கிவிட்டு, அவரை ஏமாற்றும் நோக்குடன் தெரியாது

என பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதி கேட்கும் பரிகாரம் வாதிக்கு கிடைத்தக்கது என்றால் சரியல்ல.

ம.வி.இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.03.03 17:57:10 +0530

சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.